## யூலை –01– பொதுக்கால 13ம் வார ஞாயிறு

### "நீ அச்சமின்றி உன்வழியில் நடப்பாய் உன்கால் ஒருபோதும் இடறாது"– நீ.மொ62:33

### முதல் வாசகம்: சாலமோன் ஞானம்1:13– 15: 2:23–24

சாவைக் கடவுள் உண்டாக்கவில்லை. வாழ்வோரின் அழிவில் அவர் மகிழ்வதில்லை. இருக்கவேண்டும் என்பதற்காகவே அவர் அனைத்தையும் படைத்தார். உலகின் உயிர்கள் யாவும் நலம் பயப்பவை. அழிவைத் தரும் நஞ்சு எதுவும் அவற்றில் இல்லை. கீழுலகின் ஆட்சி மண்ணுலகில் இல்லை. நீதிக்கு இறப்பு என்பது இல்லை. கடவுள் மனிதர்களை அழியாமைக்கென்று படைத்தார் தம் சொந்த இயல்பின் சாயலில் அவர்களை உருவாக்கினார். ஆனால் அலகையின் பொறாமையால் சாவு உலகில் நுழைந்தது. அதைச் சார்ந்து நிற்போர் இறப்புக்கு உள்ளாவர்.

**பதில்பாடல்:** ஆண்டவரே உம்மை ஏத்திப் புகழ்வேன் ஏனெனில்
என்னைக் கை தூக்கி விட்டீர்

### இரண்டாம் வாசகம் : 2 கொரிந்தியர் 8 : 7, 9, 13 – 15

சகோதர சகோதரிகளே! நம்பிக்கை, நாவன்மை, அறிவு, பேரார்வம் ஆகிய அனைத்தையும் மிகுதியாய்க் கொண்டிருக்கிறீர்கள். எங்கள் மேல் நீங்கள் கொண்டுள்ள அன்பும் பெருகிக்கொண்டு வருகிறது. அதுபோல் இந்த அறப்பணியிலும் நீங்கள் முழுமையாய் ஈடுபட வேண்டும். நான் இதை உங்களுக்கு ஒருகட்டளையாகச் சொல்லவில்லை. மாறாக, பிறருடைய ஆர்வத்தை எடுத்துக்காட்டி உங்கள் அன்பு உண்மையானதா எனச்சோதிக்கவே இவ்வாறு செய்கிறேன்.நம் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் அருள்செயலை அறிந்திருக்கிறீர்களே! அவர் செல்வராயிருந்தும் உங்களுக்காக ஏழையானார். அவருடைய ஏழ்மையினால் நீங்கள் செல்வராகுமாறு இவ்வாறுசெய்தார்.மற்றவர்களின் சுமையைத் தணிப்பதற்காக நீங்கள் துன்புறவேண்டும் என்று நாங்கள் சொல்லவில்லை. மாறாக, எல்லாரும் சமநிலையில் இருக்கவேண்டும் என்றேசொல்கிறோம். இப்பொழுது உங்களிடம் மிகுதியாயிருக்கிறது. அவர்களுடைய குறையை நீக்குங்கள். அவ்வாறே அவர்களிடம் மிகுதியாக இருக்கும்போது உங்கள் குறையை நீக்குவார்கள். இவ்வாறு உங்களிடையே சமநிலை ஏற்படும்."மிகுதியாகச் சேகரித்தவருக்கு எதுவும் மிஞ்சவில்லை குறைவாகச் சேகரித்தவருக்கும் எதுவும் குறைவுபடவில்லை" என்று மறைநூலில் எழுதியுள்ளது அன்றோ!

### நற்செய்தி : மாற்கு 5 : 21–43

அக்காலத்தில் இயேசு படகேறி, கடலைக் கடந்து மீண்டும் மறு கரையை அடைந்ததும் பெருந்திரளான மக்கள் அவரிடம் வந்து கூடினர். அவர் கடற்கரையில் இருந்தார்.தொழுகைக் கூடத் தலைவர்களுள் ஒருவரான யாயிர் என்பவர் வந்து, அவரைக் கண்டு அவரது காலில் விழுந்து,"என் மகள் சாகுந்தறுவாயில் இருக்கிறாள். நீர்வந்து அவள்மீது உம்கைகளை வையும். அப்போது அவள் நலம்பெற்றுப் பிழைத்துக்கொள்வாள்" என்று அவரை வருந்தி வேண்டினார். இயேசுவும் அவருடன் சென்றார். பெருந்திரளான மக்கள் அவரை நெருக்கிக்கொண்டே பின்தொடர்ந்தனர்.அப்போது பன்னிரு ஆண்டுகளாய் இரத்தப் போக்கினால் வருந்தியபெண் ஒருவர் அங்கு இருந்தார்.அவர் மருத்துவர் பலரிடம் தமக்கு உள்ளதெல்லாம் செலவழித்தும் ஒரு பயனும் அடையாமல் மிகவும் துன்பப்பட்டவர். அவர் நிலைமை வர வர மிகவும்கேடுற்றது.அவர் இயேசுவைப்பற்றிக் கேள்விப்பட்டு மக்கள் கூட்டத்துக்கிடையில் அவருக்குப் பின்னால் வந்து அவரது மேலுடையைத்தொட்டார். ஏனெனில், "நான் அவருடைய ஆடையைத் தொட்டாலே நலம்பெறுவேன்" என்று அப்பெண் எண்ணிக் கொண்டார். தொட்ட உடனே அவருடைய இரத்தப்போக்கு நின்றுபோயிற்று. அவரும் தம் நோய்நீங்கி, நலம் பெற்றதைத் தம் உடலில் உணர்ந்தார்.உடனே இயேசு தம்மிடமிருந்து வல்லமை வெளியேறியதைத் தம்முள் உணர்ந்து மக்கள் கூட்டத்தைத் திரும்பிப்பார்த்து, "என் மேலுடையைத் தொட்டவர்யார்?" என்றுகேட்டார்.அதற்கு அவருடைய சீடர்கள் அவரிடம், "இம்மக்கள் கூட்டம் உம்மைச்சூழ்ந்து நெருக்குவதைக்கண்டும், "என்னைத் தொட்டவர் யார்?" என்கிறீரே!" என்றார்கள். ஆனால் அவர் தம்மேலுடையைத் தொட்டவரைக் காணும்படி சுற்றிலும் திரும்பிப் பார்த்துக்கொண்டிருந்தார்.அப்போது அப்பெண் தமக்கு நேர்ந்ததை அறிந்தவராய், அஞ்சி நடுங்கிக்கொண்டு, அவர்முன் வந்துவிழுந்து, நிகழ்ந்தது அனைத்தையும் அவரிடம் சொன்னார். இயேசு அவரிடம், "மகளே, உனது நம்பிக்கை உன்னைக் குணமாக்கிற்று. அமைதியுடன் போ. நீ நோய் நீங்கி நலமாயிரு" என்றார்.அவர் தொடர்ந்து பேசிக்கொண்டிருந்தபோது, தொழுகைக்கூடத் தலைவருடைய வீட்டிலிருந்து ஆள்கள் வந்து, அவரிடம், "உம்முடைய மகள் இறந்துவிட்டாள். போதகரை ஏன் இன்னும் தொந்தரவு செய்கிறீர்?" என்றார்கள்.அவர்கள் சொன்னது இயேசுவின் காதில் விழுந்ததும், அவர் தொழுகைக்கூடத் தலைவரிடம், "அஞ்சாதீர், நம்பிக்கையை மட்டும் விடாதீர்" என்று கூறினார்.அவர் பேதுரு, யாக்கோபு, யாக்கோபின் சகோதரரான யோவான் ஆகியோரைத்தவிர வேறொருவரையும் தம்முடன் வரவிடவில்லை.அவர்கள் தொழுகைக்கூடத் தலைவரின் வீட்டிற்குச் சென்றார்கள். அங்கே அமளியையும் மக்கள் அழுது ஓலமிட்டுப் புலம்புவதையும் இயேசுகண்டார்.அவர் உள்ளே சென்று, "ஏன் இந்த அமளி? ஏன் இந்த அழுகை? சிறுமி இறக்கவில்லை, உறங்குகிறாள்" என்றார். அவர்கள் அவரைப்பார்த்து நகைத்தார்கள். ஆனால் அவர் அனைவரையும் வெளியேற்றியபின், சிறுமியின் தந்தையையும் தாயையும் தம்முடன் இருந்தவர்களையும் கூட்டிக்கொண்டு, அச்சிறுமி இருந்த இடத்திற்குச் சென்றார்.சிறுமியின் கையைப் பிடித்து அவளிடம், "தலித்தா கூம்" என்றார். அதற்கு, "சிறுமி, உனக்குச் சொல்லுகிறேன், எழுந்திடு" என்பது பொருள்.உடனே அச்சிறுமி எழுந்து நடந்தாள். அவள் பன்னிரண்டு வயது ஆனவள். மக்கள் பெரிதும் மலைத்துப்போய் மெய்ம்மறந்து நின்றார்கள். "இதை யாருக்கும் தெரிவிக்கக்கூடாது" என்று அவர் அவர்களுக்குக் கண்டிப்பாய்க் கட்டளையிட்டார் அவளுக்கு உணவு கொடுக்கவும் சொன்னார்.

**தியானம்:** இறைமகன் இயேசுவை நம்பிக்கையோடு நாடும் எவரையும் அவர் "திக்கற்றவர்களாக" விட்டுவிடுவதில்லை. இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் ஆண்டவர் இயேசுவைச் சந்தித்த இருவேறுபட்ட மனிதர்களுக்கு இடம்பெற்றவைகளை இன்றைய நற்செய்தி விபரிக்கின்றது. எமது வாழ்வின் ஒவ்வொரு கோணத்திலும் ஆண்டவர் இயேசு எம்மை எதிர்கொள்வதனை உணர்ந்து வாழுகின்றோமா? ஆண்டவர் இயேசுவை மீட்பரும், மெசியாவுமென நம்பிக்கை வைப்போர் சகலவித கட்டுக்களிலிருந்தும் விடுவிக்கப்படுவார்கள் என்பதனையும் இன்றைய வாசகங்கள் வேறுவிதமாக எமக்கு உணர்த்துகின்றன. மானிடவரலாற்றின் அடிச்சுவட்டிலும், சமுதாயத்தின் விளிம்பிலும் வாழ்ந்த மனிதனுக்கு எமது ஆண்டவராகிய இயேசுக்கிறிஸ்து விண்ணக வாழ்வின் மகிமையைக் கற்றுக்கொடுத்தவர். ஆண்டவர் இயேசு தமது போதனை வாழ்வால் இவ்வுலகில் பலரது வாழ்வை அன்றும், இன்றும் மாற்றிக்கொண்டிருப்பவர். இதே ஆண்டவர் இயேசுவே சமுதாயத்தின் விளிம்பில் சாதாரனமானவர்கள், பாவிகள் என்று கருதப்பட்ட பலரை வரலாற்றின் மையமாக்கியவர். இன்றைய நற்செய்தியில் பலவருடங்களாகத் தீராத வியாதியோடு சமூகத்தாலே ஒதுக்கப்பட்டு இருந்தவள், ஆடையின் விளிம்பை மட்டும் தொட்டால் குணமடைவேன் என்று ஆண்டவர் இயேசுவை நோக்கி வருகின்றபோது "மகளே உனது நம்பிக்கை உன்னைக் குணமாக்கிற்று. அமைதியுடன் போ நீ நோய் நீங்கி நலமாயிரு" என ஆறுதல் தெரிவிக்கின்றார். இரக்கத்தில் ஐஸ்வரியம் மிக்கவரான ஆண்டவர் இயேசுக்கிறிஸ்து ஒருவரால் மாத்திரமே இவ்வாறான உறுதி மொழிகளை எமக்குத் தரமுடியும். ஏனெனில் அவர் நல்லவர், அவர் செய்வன அனைத்தும் சரியானதும், நியாயமானதுமாகும். அவருக்கு நிகர் அவரே. ஆயினும் விசுவாச வாழ்வில் நடைப் பிணங்களாக வாழும் எம்மையும் பார்த்து "தலித்தா கூம்" என அழைக்கின்றார். எழுந்து அவரண்டை செல்வோமா? அவர் தரும் ஜீவ அப்பத்தைப் பெற்றுக்கொள்ள நாம் தயாரா? கோடை கால விடுமுறையை ஆரம்பிக்கும் எமக்கு இறைவனது உறுதி மொழியானது மாபெரும் ஆசீர்வாமாகத் தரப்பட்டுகிறது. இவ்வாறான ஆசீர்வாதம், எமது வாழ்நாள் முழுவதும் எம்மைப் பின்தொடர்வதனை நாம் உணர்ந்து வாழுகின்றோமா?